بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுமுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/09/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۬ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹுனைன் போரில் எதிரி வில்லாளிகளால் முஸ்லிம் படையில் ஏற்பட்ட பதற்றம் குறித்து விவரிக்கையில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அந்நூரின் 64 ஆவது வசனத்திற்கான விளக்கவுரையில், நபிக்கு எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும் என்பது தொடர்பாக இந்த நிகழ்வை எடுத்துரைத்துள்ளார்கள். அந்த வசனம்:

لَا تَجْعَلُوْا دُعَآءَ الرَّسُوْلِ بَيْنَكُمْ كَدُعَآءِ بَعْضِكُمْ بَعْضًا ؕ قَدْ يَعْلَمُ اللّٰهُ الَّذِيْنَ يَتَسَلَّلُوْنَ مِنْكُمْ لِوَاذًا ۚ

فَلْيَحْذَرِ الَّذِيْنَ يُخَالِفُوْنَ عَنْ اَمْرِهٖۤ اَنْ تُصِيْبَهُمْ فِتْنَةٌ اَوْ يُصِيْبَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۶۴﴾

இதன் பொருள்: (நம்பிக்கை கொண்டவர்களே!) உங்களுள் ஒருவரை இத்தூதர் அழைப்பது, உங்களுள் ஒருவர் மற்றவரை அழைப்பது போன்றேயாகும் எனக் கருதாதீர்கள். (ஆலோசனை மன்றத்திலிருந்து) உங்களுள் மறைவாக நழுவி விடுபவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிகின்றான். எனவே இத்தூது)வருடைய கட்டளைக்கு மாற்றம் செய்பவர்கள் (இறைவனிடமிருந்து) ஏதேனும் துன்பம் தங்களுக்கு நேர்ந்து விடுமோ அல்லது துன்புறுத்தும் தண்டனை தங்களுக்கு வந்து விடுமோ என்று அஞ்ச வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இமாமின் குரலுடன் ஒப்பிடும்போது, மக்களின் குரலுக்கு எந்த உண்மைத்துவமும் கிடையாது. இறைத்தூதரின் குரல் உங்களுடைய செவிகளில் கேட்கும் போதெல்லாம், உடனடியாக அதற்கு செவிசாய்ப்பதும், அதை செயல்படுத்துவற்காக விரைந்து செயல்படுவதும் உங்களது கடமையாகும். இதில்தான் உங்கள் முன்னேற்றத்தின் ரகசியம் மறைந்துள்ளது. இன்னும் சொல்வதாயின், அந்த நேரத்தில் மனிதன் தொழுது கொண்டிருந்தாலும், அவன் தொழுகையை முறித்து விட்டு, இறைவனின் தூதரின் குரலுக்கு

பதிலளிப்பது அவனது கடமையாகும். எவ்வாறாயினும், நபியின் குரலுக்கு உடனடியாக செவிசாய்ப்பது ஒரு கட்டாயமான செயலாகும். அதை ஈமானின் அறிகுறிகளில் ஒரு பெரிய அறிகுறி என்றே சொல்ல வேண்டும்.

பிறிதொரு தருணத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இஸ்லாமியப் படையில் பதற்றம் ஏற்பட்ட நிகழ்வின் விளக்கத்தை எடுத்துரைத்து பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதியான நிலைநிற்றலைப் பற்றி கூறுகிறார்கள்: ....நிர்பந்தம் எத்தகைய கட்டத்தை அடைந்தது என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி 12 சஹாபா மட்டுமே எஞ்சியிருந்தார்கள். அந்தத் தருணத்தில், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, ‘இப்போது நிற்பதில் எந்தப் பயனும் இல்லை. இஸ்லாமியப் படையை மீண்டும் ஒன்று திரட்டித் தாக்குதல் தொடுக்காலம். திரும்பிச் செல்லுங்கள்’ என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், மாநபி (ஸல்) அவர்கள், “அல்லாஹ்வின் நபிமார்கள் போர்க்களத்தில் புறமுதுகிட்டுச் செல்வதில்லை” என்று கூறினார்கள். இதைக் கூறிவிட்டு, பெருமானார் (ஸல்) அவர்கள் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து, அதை இன்னும் முன்னால் கொண்டு சென்றார்கள். மேலும், இந்தக் கவிதையைக் கூறினார்கள்:

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ، أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

அதாவது, நான் இறைவனின் நபி ஆவேன்; பொய்யன் அல்லன். இன்று 4000 வில்லாளர்களின் தாக்குதல் இருந்தும், நிற்காமல் முன்னேறிக் கொண்டே செல்கிறேனே, இந்தக் காட்சியைப் பார்த்து நான் இறைவன் என்றோ அல்லது இறை பண்புகள் என்னிடம் இருப்பதாகவோ நினைத்து விடாதீர்கள். இல்லை! நான் இறைவன் அல்லன்; நானோ அதே அப்துல் முத்தலிபின் மகன் ஆவேன் (அதாவது, வழித்தோன்றல் ஆவேன்). ஆனால், இந்த மக்கள் (அதாவது, நபிமார்கள்) இறைவனைக் காட்டும் மக்கள் ஆவார்கள். இந்தத் தருணத்தில், பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்குக் குரல் கொடுத்துத் திருப்பி அழைக்குமாறு ஆணையிட்டார்கள். முஸ்லிம்களுக்குக் குரல் கொடுக்கப்பட்டபோது, சில நொடிகளில் கலப்பற்ற சஹாபா (ரிஸ்) மிகவும் வேகமாக போர்க்களத்திற்குத் திரும்பி வந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் சஹாபாவின் அந்தக் கலப்பற்ற தன்மையைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஈமானிலிருந்து பயனடைந்தவர்கள் இவர்கள்தான். எவ்வாறு ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேன்மை இருந்ததோ, எப்படி எந்த ஆபத்து வந்தாலும்,

இறைவன் அன்னாருடைய கண்களிலிருந்து மறைந்துவிடவில்லையோ அவ்வாறே இதே மேன்மை சஹாபிகளிடமும் அவர்கள் அவர்களது தரத்திற்கு ஏற்ப உருவானது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் உறுதியாக நிலைத்து நின்ற சஹாபா மற்றும் சஹாபியாத்தின் எண்ணிக்கை மற்றும் பெயர்களும்கூட அறிவிப்புகளில் கிடைக்கின்றன. பல்வேறு அறிவிப்புகளில் இந்த எண்ணிக்கை 100 வரை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

மக்கள் போர்க்களத்திலிருந்து ஓடியதனால் ஹஸ்ரத் உம்மு சுலைம் (ரலி) அவர்களுக்கு, எவ்வளவு வருத்தம் ஏற்பட்டது என்றால், அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} எங்களுக்குப் பிறகு வந்து இணைந்து கொண்ட துலக்காவை, (அதாவது, ஹுஸூர் (ஸல்) அவர்கள் பெரும் கருணை புரிந்து மன்னித்து விட்ட அந்த மக்கா வாழ் மக்களைக்) கொன்று விடுங்கள்" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "உம்மு சுலைமே! நிச்சயமாக அல்லாஹ் எதிரிக்கு நிகராகப் போதுமானவனாக இருந்துள்ளான். மேலும், அவன் பேரருள் புரிந்துள்ளான்" என்று கூறினார்கள்.

இன்னொரு வீரமான சஹாபியா ஹஸ்ரத் அம்மாரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹுனைன் போர் அன்று மக்கள் ஓடிப் போனதும் நாங்கள் நான்கு பெண்கள் இருந்தோம். என்னிடம் வேகமாக வெட்டக்கூடிய வாள் இருந்தது. உம்மு சுலைம் (ரலி) அவர்களிடம் கத்தி இருந்தது. அவர்கள் அந்தக் கத்தியைத் தமது இடுப்புடன் சேர்த்து கட்டி வைத்திருந்தார்கள். மேலும், அவர்கள் கருவுற்றிருந்தார்கள். இவர்கள்போக, இன்னும் இரண்டு பெண்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் குரல் எழுப்பி, 'அன்ஸாரிகளே! நீங்கள் ஏன் ஓடுகிறீர்கள்?' என்று கேட்டார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹவாஸினின் ஒரு மனிதனைப் பார்த்தேன். அவன் கொடியை ஏந்திக் கொண்டு கோதுமை நிற ஒட்டகத்தின் மீது ஏறி முஸ்லிம்களுக்குப் பின்னால் வேகமாக சென்று கொண்டிருந்தான். நான் அவனுக்கு முன்னால் சென்று, அவனது ஒட்டகங்களின் கால்கள் மீது வாள் வீசினேன். அதன்மீது பயணித்திருந்தவன் முதுகு குப்புற கீழே விழுந்தான். அப்பொழுது நான் அவனைத் தாக்கினேன். அவனை மரண உறக்கத்தில் ஆழ்த்தும் வரை அவன் மீது வாள் வீசிக் கொண்டே இருந்தேன். பிறகு, நான் அவனது வாளை எடுத்துக் கொண்டு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம்

வந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். பிறகு முஸ்லிம்கள் எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்தார்கள். ஒட்டகத்திடமிருந்து பால் கறக்கும் அளவு நேரம் மட்டுமே எதிரிகளால் தாக்குப் பிடித்து நிற்க முடிந்தது. எதிரி இவ்வளவு இழிவான தோல்வி அடைந்ததை நான் அதற்கு முன் ஒருபோதும் கண்டதில்லை. அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு எல்லாப் பக்கமும் ஓடிக் கொண்டிருந்தனர். என் மகன்கள் திரும்பி வந்தபோது, அவர்களிடம் சிறைபிடிக்கப்பட்டவர்கள் இருந்தார்கள்.

சஹாபா பெருமக்கள் திரும்பி வந்ததும் போர் உச்சத்தில் இருந்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்த நிலையில் பார்வையை உயர்த்தி போரைப் பார்வையிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், “போர் அதன் உச்சத்தில் உள்ளது” என்று கூறினார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் கூழாங்கற்களை எடுத்து அவற்றைக் காஃபிர்களின் முகங்களை நோக்கி எறிந்தார்கள். பிறகு “முஹம்மதின் இறைவன் மீது ஆணையாக! {(ஸல்)} இந்த மக்கள் தோல்வியடைந்து விட்டார்கள்” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பார்த்தபோது, நான் (முதலில்) பார்த்தது போன்றே போர் நடந்து கொண்டிருந்தது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்கள் கூழாங்கற்களை எறிந்ததும், காஃபிர்களின் வேகம் தொய்வடையத் துவங்கியது. மேலும், அவர்களது விவகாரம் தலைகீழாக ஆக ஆரம்பித்தது. அந்தத் தருணத்தில் மாநபி (ஸல்) அவர்கள் செய்த ஒரு துஆவைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இவ்வாறாகும்:

اَللّٰهُمَّ إِنِّيْ أَنْشُدُكَ مَا وَعَدْتَنِيْ أَللّٰهُمَّ لَا يَنْبَغِيْ لَهُمْ أَنْ يَّظْهَرُوْا عَلَيْنَا

பொருள்: அல்லாஹ்வே! நீ எனக்கு வாக்குறுதி அளித்ததை நான் உன் முன்னால் வைத்துக் கூறுகிறேன். அல்லாஹ்வே! அவர்கள் எங்கள் மீது மேலோங்குவதும், நாங்கள் தோல்வியடைந்து விடுவதும் பொருத்தமானதல்ல.

ஷைபா பின் உஸ்மான் ஒரு கண்ணியத்திற்குரிய குறைஷிய மனிதராக இருந்தார். அவருடைய தகப்பன் உஸ்மான் பின் தல்ஹா உஹுது போரில் கொல்லப்பட்டான். அவர், ‘முழு அரேபியாவும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் கலிமாவைக் கூறினாலும், அப்பொழுதும் நான் முஸ்லிம் ஆக மாட்டேன்’ என்று கூறி வந்தார்.

அவர் கூறுகிறார்: போர்க்களத்தில் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒரு சில மக்கள்தான் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்ததும், நான் (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று கருதினேன். இவ்வாறு நினைத்து அன்னாருக்கு வலது பக்கமாக சென்று தாக்குதல் தொடுக்கப் பார்த்தபோது, அங்கு அப்பாஸ் அவர்கள் நிற்பதைக் கண்டேன். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இருக்கும்போது, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள்மீது தாக்குதல் தொடுப்பது சாத்தியமில்லை என்று கருதினேன். பிறகு நான் இடது பக்கமாக தாக்குதல் தொடுக்கப் பார்த்தேன். அப்பொழுது அங்கு அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் அவர்கள் நிற்பதைக் கண்டேன். பிறகு நான் பெருமானார் (ஸல்) அவர்களின் பின்பக்கமாக வந்து தாக்குதல் தொடுக்கப் பார்த்தபோது, நான் என் கண்களைக் கைகளால் மூடிக் கொண்டு வேகமாக ஓடித் திரும்பி வந்தேன்.

பிற்காலத்தில் இவர் கூறி வந்தார்: எனக்குத் தீப்பிழம்புகள் பறப்பது தென்பட்டது. அவை என்னை எரித்து சாம்பலாக்கியிருக்கும். இந்த நிலையில், பெருமானார் (ஸல்) அவர்கள், “ஷைபா எனக்கு அருகில் வா” என்று குரல் கொடுத்தார்கள். இவர் கூறுகிறார்: நான் அருகில் சென்றதும், பெருமானார் (ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள். மேலும், எனது நெஞ்சில் தமது அருளுக்குரிய கைகளைத் தடவி, இவ்வாறு துஆ செய்தார்கள்.

أَللّٰهُمَّ اذْهِبْ عَنْهُ الشَّيْطٰنَ

பொருள்: அல்லாஹ்வே! ஷைத்தானை இவரை விட்டு விலக்கிவிடுவாயாக!

ஷைபா கூறுகிறார்: இறைவன் மீது ஆணையாக! அந்தக் கணமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு என்னுடைய காதுகள், என்னுடைய கண்கள் மற்றும் எனது உயிரை விடவும் மிகவும் அன்பிற்குரியவர்கள் ஆகி விட்டார்கள். மேலும், எனது இதயம் தூய்மையாகி விட்டது. பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் ஷைபாவிடம், “ஷைபா! காஃபிர்களோடு போர் புரிவீராக” என்று கூறினார்கள்.

அவர் கூறுகிறார்: இப்பொழுது நான் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தற்காத்தவாறு வாளை எடுத்துக் கொண்டு முன்னால் சென்றேன். மாநபி (ஸல்) அவர்கள் மீதான நேசத்தில், எப்படிப் போர் செய்யலானேன் என்றால், அந்த நேரத்தில் என் தந்தையும் எனக்கு முன்னால் வந்திருந்தால் அவரையும் கொன்றிருப்பேன். இந்த நிகழ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் இந்த நிகழ்வை எடுத்துரைத்து விட்டுக் கூறுகிறார்கள்: மாநபி (ஸல்) அவர்களின் அன்புதான் அவரது பகைமையை அகற்றி விட்டது.

போர் முடிந்த பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கூடாரத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஷைபா பின் உஸ்மான் பெருமானார் (ஸல்) அவர்களைக் காண்பதற்காக வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், "ஷைபா! நீர் அப்பொழுது என்ன யோசித்துக் கொண்டிருந்தீரோ அதைவிட, அல்லாஹ் இப்பொழுது உமக்கு நிர்ணயித்திருப்பது சிறந்ததாகும்" என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷைபாவுக்கு ஷைபா போர்க்களத்தில் தன் மனதில் யோசித்துக் கொண்டிருந்த அந்த அனைத்து விஷயங்களையும் கூறினார்கள். ஷைபா தனக்குப் பாவமன்னிப்புக்காக துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள், غَفَرَ اللّٰهُ لَكَ அதாவது, அல்லாஹ் உம்முடைய பாவங்களை மன்னித்தருள்வானாக!" என்று துஆ செய்தார்கள்.

இவ்வாறே நுஸைர் பின் ஹாரிஸின் தீய எண்ணம் மற்றும் அவரது நல்ல முடிவு பற்றிய குறிப்பும் கிடைக்கிறது. மக்காவிலிருந்து தீய நிய்யத்துடன், கெட்ட எண்ணத்துடன் ஹுனைன் படையில் இணைந்திருந்தவர்களில் இவரும் ஒருவர் ஆவார். இவர் பிற்காலத்தில் பெரும்பாலும் இந்த விஷயத்தை வெளிப்படுத்தி வந்தார்: அல்லாஹ்வுக்கு நன்றி! எங்கள் மூதாதையர்கள் இருந்த அந்த இணைவைப்பில் நாங்கள் மரணிக்கவில்லை.

இவரது இஸ்லாம் (அதாவது, இஸ்லாத்தை ஏற்றதற்குப் பிறகுள்ள வாழ்வு) மிகவும் நன்றாக இருந்தது. இவர் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்குச் சென்று விட்டார். பிறகு, அங்கிருந்து ஜிஹாது செய்யும் நோக்கத்தில் சிரியாவை நோக்கிச் சென்று விட்டார். மேலும், ஹிஜ்ரீ 15 ஆம் ஆண்டு யர்மூக் போரில் ஷஹீதானார். மீதமுள்ளவை இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ
سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا
عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ
وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**